ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1487/5 - 2007 මාර්තු 05 වැනි සඳුදා - 2007.03.05

1487/5 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

108 (1) (ஆ) பிரிவின் கீழான அறிவித்தல்

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் (1) உபபிரிவின் பந்தி (ஆ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் அப்பிரிவின் நோக்கங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் என இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய,*
*பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2007, மாச்சு 1.*

**அட்டவணை**

1. ஆதனங்கள் தொடர்பான பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள்:-

(அ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம், ஈடு, குத்தகை அல்லது கொடை என்பவற்றுக்காக நொத்தாரிசுவால் எழுதி நிறைவேற்றப்பட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ;

(ஆ) எவையேனும் வதிவிட அல்லது வர்த்தக வளவுகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்காக நொத்தாரிசுவால் எழுதி நிறைவேற்றப்பட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ;

(இ) ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை வாடகைக்கு, விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்காக நொத்தாரிசுவால் எழுதி நிறைவேற்றப்பட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும்.

2. வாகனங்களைப் பதிவு செய்வதற்காக, கைமாற்றுவதற்காக அல்லது ஈடு வைப்பதற்காக மோட்டார் வாகனப் பதிவாளருடனான கொடுக்கல் வாங்கல்கள்.

3. பின்வருவனவற்றுக்காக வங்கிகளுடனும், நிதி நிறுவனங்களுடனும், அத்துடன் பணம் கடன் கொடுப்பவர்களுடனுமான கொடுக்கல் வாங்கல்கள்:-

(அ) நடப்புக் கணக்குகளைத் திறத்தல் ;
(ஆ) நிலையான வைப்புக்களைத் திறத்தல் ;
(இ) கடன்கள் ;
(ஈ) ஒரு நாணயமாற்றுண்டியலைக் கழிவு தள்ளிக் கொடுத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்.
(உ) கடன் பத்திரங்கள் ;
(ஊ) நம்பிக்கை பற்றுச்சீட்டுகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் அடைவுகள்.

**வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பணம் கடனுக்கு வாங்குவோர் உடனான கொடுக்கல் வாங்கல்கள்**

4. பங்குகளையும் தொகுதிக்கடன் பத்திரங்களையும் கொள்வனவு செய்து விற்பதற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

5. தொழில்களைப் பதிவு செய்வதற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

6. ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கு உயர் தொழிற்சேவைகளை அல்லது வேறு சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

7. கட்டட அனுமதிப்பத்திரங்களுக்கும் உரிமங்களுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுடனான கொடுக்கல் வாங்கல்கள்.

8. தனியார் கோச்சுக்களை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரங்களுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடனான கொடுக்கல் வாங்கல்கள்.

9. வியாபாரமொன்றை அல்லது தொழிலொன்றைக் கொண்டு நடத்தும்போது தவிர, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பண்டங்களை விற்பதற்கான கொடுக்கல் வாங்கல்கள்.

*3-599*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.